www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

## இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 90

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20

1. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
   அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு
   இ) இருப்புநிலைக் குறிப்பு ஈ) பேரேடு
2. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதைக் கூறும் கருத்து
   அ) பண மதிப்பீட்டு கருத்து ஆ) அடக்க விலை கருத்து
   இ) வணிகத் தனித்தன்மை கருத்து ஈ) இரட்டைத்தன்மை கருத்து
3. சொத்துக் கணக்கு கையாள்வது
   அ) தனிப்பட்ட நபர்கள் ஆ) செல்வுகள் மற்றும் இழப்புகள்
   இ) சொத்துகள் ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்
4. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹60,000 எனில் அந்நிறுவனத்தின் முதல் ______.
   அ) ₹1,60,000 ஆ) ₹60,000 இ) ₹1,00,000 ஈ) ₹40,000
5. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டுவரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
   அ) ரொக்க கணக்கு ஆ) எடுப்புக் கணக்கு
   இ) முதல் கணக்கு ஈ) அனாமத்து கணக்கு
6. இருப்பாய்வு என்பது ஒரு
   அ) அறிக்கை ஆ) கணக்கு
   இ) பேரேடு ஈ) குறிப்பேடு
7. இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும், வரவுப் பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு
   அ) வியாபார கணக்கு ஆ) வேறுபாட்டு கணக்கு
   இ) அனாமத்து கணக்கு ஈ) இதர கணக்கு
8. ஒரு குறிப்பிட்ட கால கொள்முதல் ஏட்டின் மொத்தம், எடுத்தெழுதப்படுவது
   அ) கொள்முதல் கணக்கின் பற்று பக்கம்
   ஆ) விற்பனை கணக்கின் பற்று பக்கம்
   இ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை
   ஈ) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை
9. நிலைச்சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு
   அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு
   இ) கொள்முதல் திருப்ப ஏடு ஈ) உரிய குறிப்பேடு
10. ரொக்க ஏடு ஒரு
    அ) துணை ஏடு ஆ) முதன்மை ஏடு
    இ) உரிய குறிப்பேடு ஈ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. எந்த செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?
அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள்
ஆ) மேலாளரின் ஊதியம்
இ) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க
ஈ) மூலப் பொருட்கள் வாங்க

12. ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹2,000 வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ₹50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில், வங்கி அறிக்கையின்படி இருப்பு என்ன?
அ) ₹1,950 வரவு இருப்பு ஆ) ₹1,950 பற்று இருப்பு
இ) ₹2,050 பற்று இருப்பு ஈ) ₹2,050 வரவு இருப்பு

13. இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள்
அ) விதிப் பிழைகள் ஆ) அதிகமாக கூட்டுதல் பிழைகள்
இ) குறைவாகக் கூட்டுதல் பிழைகள் ஈ) பகுதி விடு பிழைகள்

14. ஒரு நடவடிக்கை முழுவதுமே பதிவு செய்யப்படாத போது அது _______ எனப்படும்.
அ) விதிப்பிழை ஆ) முழு விடு பிழை
இ) பகுதி விடு பிழை ஈ) இருமுறை பதிந்த பிழை

15. தேய்மானம் மற்றும் பராமரிப்புச் செலவுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும் போது கீழ்க்கண்ட முறைகளில் எது சீரான தாக்கத்தை ஏற்படுத்தும்?
அ) நேர்க்கோட்டு முறை ஆ) குறைந்த செல் இருப்பு முறை
இ) ஆண்டுதொகை முறை ஈ) காப்பீட்டு முனைம் முறை

16. வணிகச் செயல்பாட்டிற்கு முந்தைய செலவுகள்
அ) வருவாயினச் செலவுகள்
ஆ) முன் கூட்டிய செலுத்திய வருவாயினச் செலவுகள்
இ) நீள்பயன் வருவாயினச் செலவுகள்
ஈ) முதலினச் செலவுகள்

17. பின்வருவனவற்றில் எது நடப்பு சொத்துகளில் சேராதது?
அ) ரொக்கம் ஆ) சரக்கிருப்பு
இ) அறைகலன் ஈ) முன்கூட்டிச் செலுத்திய செலவு

18. இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது
அ) அடக்க விலையில்
ஆ) சந்தை விலையில்
இ) அடக்கவிலை அல்லது சந்தை விலை இதில் எது அதிகமோ அந்த விலையில்
ஈ) அடக்கவிலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்

19. பின்வருவனவற்றில் எது கணினி அமைப்பின் கூறு அல்ல?
அ) உள்ளீட்டு அலகு ஆ) வெளியீட்டு அலகு
இ) தரவு ஈ) மையச் செயல்பாட்டு அலகு

20. கணக்கியல் மென்பொருள் என்பது இதற்கு உதாரணம்
அ) அமைப்பு மென்பொருள் ஆ) செயல்பாட்டு மென்பொருள்
இ) பயன்பாட்டு மென்பொருள் ஈ) இயக்க முறைமை

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக.

22. பின்வரும் நடவடிக்கைக்கு குறிப்பேட்டு பதிவு தருக.

2018 மே 10 M என்பவருக்கு கடன் விற்பனை செய்தது ₹12,000

15 Mஎன்பவர் நொடிப்பு நிலையடைந்ததால் ஒரு ரூபாய்க்கு 80 காசுகள் வீதம் ரொக்கம் பெற்று, அவர் கணக்கு தீர்க்கப்பட்டது.

23. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம்பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக.

i) வெளித்தூக்கு கூலி

ii) தள்ளுபடி பெற்றது

iii) வாராக்கடன்

iv) கொள்முதல் திருப்பம்

24. உரிய குறிப்பேடு என்றால் என்ன?

25. பின்வரும் விவரங்களுக்கு ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.

அ) ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹7,130

ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ₹1,000

இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ₹800

26. கீழ்க்கண்ட பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவைகளைத் திருத்தவும்.

அ) விற்பனை ஏட்டில் ₹100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது

ஆ) விற்பனை ஏட்டில் ₹200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது

இ) கொள்முதல் ஏட்டில் ₹300 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது

ஈ) கொள்முதல் ஏட்டில் ₹400 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது

27. முதலினச் செலவு என்றால் என்ன?

28. சஞ்சயின் ஏடுகளில் 31, டிசம்பர் 2017 ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| *விவரம்* | ₹ | *விவரம்* | ₹ |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 570 | கொள்முதல் | 15,800 |
| விற்பனை | 26,200 | கொள்முதல் திருப்பம் | 90 |
| விற்பனைத் திருப்பம் | 60 | இறுதிச் சரக்கிருப்பு | 860 |

29. குறிமுறை என்றால் என்ன?

30. 2017 மார்ச் 31 அன்று கழிவுக்கு முன்னர் உள்ள நிகர இலாபம் ₹11,000. மேலாளருக்கு கழிவுக்குப் பின் நிகர இலாபத்தில் 10% கழிவு கொடுக்கப்பட வேண்டும். அதற்கான சரிக்கட்டுப்பதிவு தருக.

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. கணக்கியல் முழு வெளியீட்டுக் கொள்கை என்றால் என்ன?

32. இரட்டைப்பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

33. 2017 மார்ச் 1 அன்று குமரன் என்பவரது ஏடுகளில் பின்வரும் இருப்புகள் இருந்தன.
*சொத்துகள் :* ரொக்கம் ₹1,00,000 ; சரக்கிருப்பு ₹40,000 ; ரோஹித் என்பவரிடமிருந்து தொகை பெற வேண்டியது ₹10,000 ; அறைகலன் ₹10,000 ; *பொறுப்புகள் :* அனஷ் என்பவருக்கு செலுத்த வேண்டிய தொகை ₹40,000 ; குமரன் முதல் கணக்கு ₹1,20,000

34. கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்குகளின் இருப்புகளைக் கண்டறிந்து அவை இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுபத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக.

1) பற்பல கடனாளிகள்
2) பற்பல கடனீந்தோர்
3) சம்பளம்
4) தள்ளுபடி அளித்தது
5) வங்கி மேல்வரைப்பற்று
6) அறைகலன்

35. பின்வரும் நடவடிக்கைகளை எழுதுபொருள் வியாபாரம் செய்யும் இராம் நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிவு செய்க.

| | |
|---|---|
| 2017 ஜனவரி 1 | அன்பு விற்கு கடனுக்கு விற்றது ரீம் ஒன்று ₹150 வீதம் 20 ரீம்கள் வெள்ளைத்தாள் |
| ஜனவரி 2 | ஜெகதீஷ் நிறுவனத்திற்கு ஒரு டஜன் ₹360 வீதம் 6 டஜன்கள் எழுதுகோல் கடனுக்கு விற்றது |
| ஜனவரி 10 | பழைய செய்தித்தாளை ரொக்கத்திற்கு விற்றது ₹620 |
| ஜனவரி 15 | இளங்கோவிற்கு கடனுக்கு விற்றது ஒன்று ₹170 வீதம் 10 ஓவிய அட்டைகள் |
| ஜனவரி 20 | கனி விற்பனையகத்திற்கு ஒன்று ₹1520 வீதம் 4 எழுது மேசைகளை ரொக்கத்திற்கு விற்றது |

36. பின்வரும் நடவடிக்கைகளை குணால் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | | | ₹ |
|---|---|---|---|
| 2017 ஜன. | 1 | கை இருப்பு ரொக்கம் | 11,200 |
| | 5 | இரமேஷ் என்பவரிடமிருந்து பெற்றது | 300 |
| | 7 | வாடகை செலுத்தியது | 30 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்குகளை விற்றது | 300 |
| | 10 | மோகனுக்கு செலுத்தியது | 700 |
| | 27 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 200 |
| | 31 | சம்பளம் கொடுத்தது | 100 |

37. இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

அ) விற்பனை ஏட்டில் ₹10,000 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது

ஆ) அறைகலன் பழுதுபார்ப்புச் செலவு ₹500 அறைகலன் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது

இ) அகில் நிலவனுக்கு கடனுக்கு ₹456 க்கு சரக்கு விற்றது. அவர் கணக்கில் ₹654 என வரவு வைக்கப்பட்டுள்ளது

38. ஒரு நிறுமம் ₹50,000 மதிப்புள்ள கட்டடம் ஒன்றை வாங்கியது. கட்டடத்தின் பயனிப்பு காலம் 10 ஆண்டுகள். மேலும் அதன் இறுதி மதிப்பு ₹5,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் கணக்கிடுக.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



39. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்பனைத் தொகையைக் காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 20,000 |
| நிகர கொள்முதல் | 70,000 |
| நேரடிச் செலவுகள் | 10,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 30,000 |
| மொத்த இலாப விகிதம் (விற்பனையில்) | 20% |

40. 31.3.2016 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹10,000. சரிகட்டுதல் வாராக்கடன் ₹300 போக்கெழுதவும். சரிக்கட்டுப் பதிவு தந்து, இவ்விவரம் 2016, மார்ச் 31ஆம் நாளன்றைய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

| | | | ₹ |
|---|---|---|---|
| 2018 மார்ச் | 1 | மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டுவந்த ரொக்கம் | 60,000 |
| | 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| | 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| | 6 | கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| | 10 | ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| | 14 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| | 18 | வாடகை செலுத்தியது | 500 |
| | 25 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| | 28 | சொந்தப் பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

*(அல்லது)*

ஆ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

42. அ) பின்வரும் நடவடிக்கைகளை கணேசன் என்பவரது ஏடுகளில் குறிப்பேட்டில் பதிவு செய்து பேரேட்டுக் கணக்குகளிலும் எடுத்து எழுதுக.

| | | | ₹ |
|---|---|---|---|
| 2017 அக். | 1 | தொழில் ரொக்கத்துடன் தொடங்கியது | 25,000 |
| | 5 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 12,500 |
| | 10 | அறைகலன் வங்கி காசோலை கொடுத்தது | 2,000 |
| | 15 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 5,000 |
| | 19 | வாசு என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 4,000 |
| | 22 | சொந்த பயனுக்காக சரக்குகள் எடுத்துக்கொண்டது | 500 |

*(அல்லது)*

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆ) பின்வருபவை முதலின, வருவாயின இனங்களா என்பதைக் கூறுக.

i) ஏற்கனவே உள்ள கட்டிடத்தோடு கூடுதலாகக் கட்டியது ₹5,000

ii) பழைய மகிழுந்து வாங்கியது ₹30,000 மேலும் அதனை உடனடியாக பழுது பார்த்ததற்கான செலவு ₹2,000

iii) புதிய தொழிற்சாலையை வண்ணம் பூசுவதற்கான செலவு ₹10,000

iv) புதிய இயந்திரம் மீதான ஏற்றிச் செல் செலவு வண்டிக்கட்டணம் ₹150 மற்றும் நிறுவுகைச் செலவுகள் ₹200

v) வாங்கிய பழைய வாகனத்தை பழுது பார்த்ததற்கான செலவு ₹150

43. அ) பின்வரும் தகவல்களிலிருந்து 2017 டிசம்பர் 31ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயாரித்து வங்கி அறிக்கையின்படியான இருப்பினைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 1. ரொக்க ஏட்டின் படி இருப்பு | 15,000 |
| 2. செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 1,000 |
| 3. 2017 டிசம்பர் 31-க்கு முன்னர் விடுத்த காசோலை ரொக்க ஏட்டில் பதியப்பெற்று அந்நாள் வரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை | 1,500 |
| 4. வங்கியால் நேரடியாகப் பெற்ற பங்காதாயம் | 200 |
| 5. வங்கியால் நேரடியாகச் செலுத்தப் பெற்ற வாடகை | 1,000 |
| 6. வங்கி வசூலித்த பாதுகாப்பு பெட்டக வாடகை ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 1,200 |
| 7. 2017 டிசம்பர் 30 அன்று வங்கியால் செய்யப்பட்ட தவறுதலான பற்று | 500 |
| 8. இணையவங்கி வாயிலாக செலுத்தியது ரொக்க ஏட்டில் இருமுறை பதிவுசெய்யப்பட்டது | 300 |

(அல்லது)

ஆ) ரவிச்சந்திரன் என்பவரது ஏடுகளிலிருந்து 31.12.2016 அன்று எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| முதல் | 1,50,000 | விற்பனை | 75,000 |
| கடனாளிகள் | 22,800 | விற்பனைத் திருப்பம் | 1,000 |
| பெற்ற வாடகை | 500 | அளித்த தள்ளுபடி | 800 |
| வங்கி மேல்வரைப்பற்று | 3,100 | பெற்றத் தள்ளுபடி | 1,000 |
| கடனீந்தோர் | 5,500 | கூலி | 2,900 |
| வளாகம் | 1,46,000 | சம்பளம் | 3,500 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | கழிவு கொடுத்தது | 1,100 |
| கொள்முதல் | 45,000 | பொதுச் செலவுகள் | 2,000 |

www.Padasalai.Net

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



44. அ) இலக்குமி போக்குவரத்து நிறுவனம் அக்டோபர் 1, 2014 அன்று ₹8,00,000 க்கு கனரக வாகனம் ஒன்றை வாங்கியது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுதோறும் 15% தேய்மானம் நீக்கப்படவேண்டும். 31 மார்ச் 2017-ல் அக்கனரக வாகனம் ₹5,00,000க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31-ல் முடிக்கப் பெறுகின்றன. விற்ற வாகனத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தினைக் கணக்கிடவும்.

*(அல்லது)*

ஆ) கணேஷ் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து, வியாபார இலாப நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு (1.1.2017) | 8,000 | வாராக்கடன் | 1,200 |
| கொள்முதல் | 22,000 | வியாபாரச் செலவுகள் | 1,200 |
| விற்பனை | 42,000 | அளித்த தள்ளுபடி | 600 |
| கொள்முதல் மீதான செலவுகள் | 2,500 | கழிவு கொடுத்தது | 1,100 |
| நிதிசார் செலவுகள் செலுத்தியது | 3,500 | விற்பனைச் செலவுகள் | 600 |
| விற்பனை மீதான செலவுகள் | 1,000 | அலுவலக வாகனங்கள் மீதான பழுதுபார்ப்புச் செலவுகள் | 600 |

2017 டிசம்பர் 31 அன்றைய இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ₹4,500

45. அ) ஆனந்த் என்பவரின் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்யவும்.

| | | | ₹ |
|---|---|---|---|
| 2017 டிசம்பர் | 1. | கைவச ரொக்கம் | 19,500 |
| | 4 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 32,000 |
| | 5 | காந்தியிடம் கடனுக்கு கொள்முதல் செய்தது | 20,000 |
| | 9 | கோபுவிடம்பெற்றது | 11,800 |
| | | அவருக்கு அளித்த தள்ளுபடி | 200 |
| | 15 | மின்கட்டணம் ரொக்கமாகச் செலுத்தியது | 12,500 |
| | 17 | ரொக்கம் செலுத்தி கணிப்பொறி மற்றும் அதன் இதர பாகங்களை வாங்கியது | 16,800 |
| | 25 | காந்திக்கு ₹19,700 செலுத்தி அவர் கணக்கு முழுவதையும் தீர்த்துக் கொண்டது | |
| | 28 | திருவேங்கடத்திடம் ரொக்கம் பெற்றது | 8,900 |
| | | அவருக்கு அளித்த தள்ளுபடி | 100 |
| | 30 | வியாபார செலவுகளை ரொக்கமாகச் செலுத்தியது | 3,500 |

*(அல்லது)*

ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் மூலம் உருவாக்கப்படும் பலவேறு வகையான அறிக்கைகளைப் பட்டியலிடவும்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



46. அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு நிரஞ்சன் அவர்களின் 2017 பிப்ரவரி மாதத்திற்கான துணை ஏடுகளைத் தயாரித்து, சச்சின் நிறுவனத்தின் மற்றும் முகில் பேரேட்டுக் கணக்குகளில் எடுத்தெழுதுக.

| | | | ₹ |
|---|---|---|---|
| 2017 பிப்ரவரி | 1 | முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 12,480 |
| | 4 | சச்சின் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,000 |
| | 6 | மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12,100 |
| | 7 | சச்சின் நிறுவனம் திருப்பிய சரக்கு ; அதற்கு பணம் செலுத்தப்படவில்லை | 1,200 |
| | 9 | முகில் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பி அனுப்பியது பணம் பெறப்படவில்லை | 1,500 |
| | 10 | மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 13,300 |
| | 14 | முகில் நிறுவனத்திடம் சரக்கு கடனுக்கு வாங்கியது | 15,200 |

*(அல்லது)*

ஆ) கீழ்க்கண்ட விவரங்கள் இருப்பாய்விலிருந்து பெறப்பட்டன. பற்பல கடனாளிகள் ₹30,000; வாராக்கடன் ₹5,000

**கூடுதல் தகவல்கள் :**

அ) கூடுதல் வாராக்கடன் ₹3000 போக்கெழுதவும்

ஆ) 10% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்படவேண்டும்

தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தந்து இவ்விவரம் இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

47. அ) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்டன. அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதி பிழை திருத்தக் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

i) கொள்முதல் ஏட்டின் மொத்தம் ₹100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது

ii) ரொக்க ஏட்டின் பற்றுப்பக்கம் உள்ள தள்ளுபடிப் பத்தியின் கூட்டுத்தொகை ₹575 பேரேட்டில் எடுத்து எழுதப்படவில்லை.

iii) விற்பனை ஏட்டின் ஒரு பக்கத்தின் கூட்டுத்தொகை ₹5975 அடுத்த பக்கத்தில் முன் எடுத்து எழுதும்போது ₹5795 என எழுதப்பட்டுள்ளது.

iv) சம்பளம் ₹1,800 பேரேட்டில் ₹18,000 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

v) முகிலனிடமிருந்து கடனுக்கு ₹150-க்கு சரக்கு வாங்கியது முகிலன் கணக்கில் ₹1,500 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

*(அல்லது)*

ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டினை உருவாக்கவும்.

i) ரொக்கம் ₹80,000 மற்றும் சரக்குகள் ₹75,000 கொண்டு வியாபாரம் தொடங்கப்பட்டது

ii) சண்முகத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹50,000

iii) சண்முகத்திடமிருந்து ₹49,000 பெற்றுக் கொண்டு அவரது கணக்கு தீர்க்கப்பட்டது

iv) கொடுபட வேண்டிய சம்பளம் ₹3,000

v) ₹1,000 மதிப்புள்ள சரக்குகள் தொண்டு நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது.

******

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com